

சென்னை அண்ணா அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் – முப்பெரும் விழாவை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சிலையும், அறிவாலய கட்டடமும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# அக்டோபர் 27ஆம் தேதி சேலம் கோட்டை மாரியம்மன் கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப்.16 -

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (14.09.2023) சேலம், கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் ரூ.4.35 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திருப்பணிகளையும், ரூ.4.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சேலம் மண்டல இணை ஆணையர் அலுவலக கட்டுமானப் பணிகளையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபின், குடமுழுக்கு நடத்திட எடுத்துக் கொள்ளப்பட்டு, நீண்ட காலமாக திருப்பணி நடைபெற்று வரும் திருக்கோயில்கள், ஆகம விதிப்படி குடமுழுக்கு நடந்து 12 ஆண்டுகள் நிறைவு பெற்று, மீண்டும் குடமுழுக்கு செய்யப்பட வேண்டிய திருக்கோயில்களை பட்டியலிட்டு, அவற்றின் பணிகளை துரிதப்படுத்தி வருகிறோம்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில் 400 ஆண்டுகளுக்கு பிறகும், காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, கரிய மாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு பிறகும், பல்வேறு திருக்கோயில்கள் 200 ஆண்டுகள், 150 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆட்சியில் தான் குடமுழுக்கு நடத்தப்பட்டது. அதேபோல் 150 ஆண்டுகளுக்கு பிறகு விழுப்புரம் மாவட்டம், பூவரச ங்குப்பம், லட்சுமி நரசிம்மர் திருக்கோ யிலிலும், 80 ஆண்டுகளுக்கு பிறகு காஞ்சிபுரம் மாவட்டம், சீட்டணஞ்சேரி காளீஸ்வரர் திருக்கோயிலும் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் தேரோட்டம் நடைபெற்றது.

அந்த வகையில் சேலம், கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் குடமுழுக்கு பணிகள் 2016 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நீண்ட ஆண்டுகளாக திருப்பணிகள் காலதாமதம் ஏற்பட்டதை சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இராஜேந்திரன் துறையின் கவனத்திற்கு கொண்டு வந்தவுடன் கடந்த 07.09.2022 அன்று இத்திருக்கோயிலுக்கு வருகை தந்து ஆய்வு செய்தோம். 850 ஆண்டுகள் பழமையான இத்திருக்கோயிலுக்கு ரூ.4.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வந்த திருப்பணிகளில் 90 சதவீதம் நிறைவுற்றுள்ளது.

எனவே சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்கு அடுத்த மாதம் 27 ஆம் தேதி குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற உள்ளது என்பதனை மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறேன். அதேபோல் திருப்பணி தொடங்கப்பட்டதிலிருந்து இத்திருக்கோயிலின் தங்கத் தேர் பக்தர்களுடைய நேர்த்திக்கடனை செலுத்துவதற்கு உலா வராத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே அம்மனின் தங்கத் திருத்தேரையும் ரூ.4.25 இலட்சம் செலவில் புனரமைத்து குடமுழுக்கு நடைபெறுகின்ற அதே நாளில் உலா வருவதற்கு ஏற்பாடு செய்யப்படும். மேலும், சேலம் மண்டல இணை ஆணையர் அலுவலகம் ரூ.4.5 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. அதனையும் ஆய்வு செய்தோம்.

இந்து சமய அறநிலையத் துறையின் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கடந்த 28 மாதங்களில் ரூ.5,210 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்துமீட்கப்பட்டுள்ளன. 1,044 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி வைக்கப்பட்டுள்ளது. பக்தர்களுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தி வழங்கப்பட்டுள்ளன. 1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மையான திருக்கோயிலை புனரமைக்க முதலமைச்சர் அவர்கள் ஆண்டிற்கு ரூ.100 கோடி வீதம் ரூ.200 கோடி வழங்கியுள்ளார். இந்த ஆட்சியை அதிக குடமுழுக்குகள் நடத்திய ஆட்சியாக கருதி மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

**பா.ஜ.க. மாநிலத் தலைவரின் உளறல்!**

இப்படி சிறப்பாக செயல்படும் ஆட்சியின் மீது குறை சொல்வதற்கு எந்த பொருளும் கிடைக்கவில்லை என்பதால் பா.ஜ.க மாநில தலைவர் தினம் ஒரு உளறலை உளறிக் கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டில் என்ன செய்து தங்கள் கட்சியை தக்க வைத்துக் கொள்ளலாம் என புரியாமல் திகைத்து கொண்டு இருக்கின்றார். என் மண் என் மக்கள் யாத்திரை படுதோல்வியே இதற்கு காரணமாகும். உப்பு சப்பு இல்லாத சனாதன பிரச்சனை கையில் எடுத்துக் கொண்டு வருகின்றார். எங்களை பொறுத்தளவில் தெளிவாக சொல்லிவிட்டோம் சனாதனத்தை ஏற்றுக் கொண்டவர்களை எல்லாம் நாங்கள் எதிர்க்கவில்லை சனாதனத்தில் இருக்கின்ற ஒரு சில கோட்பாடுகளை தான் நாங்கள் எதிர்க்கிறோம். இந்த ஆட்சியை பொறுத்தளவில் சமத்துவத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி கொண்டே இருப்போம். அதை வலியுறுத்துகின்ற கடமை உறுதி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்களுக்கும் உண்டு என்பதை தெளிவாக சொல்லிக் கொள்கிறேன்.

**1000வது குடமுழுக்கு**

சமீபத்தில் நடைபெற்ற 1,000 வது குடமுழுக்கான மேற்கு மாம்பலம் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் குடமுழுக்கு சமூக ஊடகங்களில் ட்ரெண்டிங்காக பரவி அனைத்து தரப்பினரும் இந்த ஆட்சியை பாராட்டினார்கள். அடுத்ததாக திருக்கோயில்கள் சார்பில் அர்ச்சகர் மற்றும் ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெற்ற 98 மாணவர்களுக்கு பயிற்சி நிறைவு சான்றிதழ்களை வழங்கினோம். இது பெண்களின் உயர்விற்கான ஆட்சி என்பதற்கு உதாரணமாக அவர்களில் 3 பெண்கள் அர்ச்சகர் பயிற்சி வகுப்பினை முடித்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதைத்தான் நாங்கள் சமத்துவ ஆட்சி என்று கூறுகிறோம். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற திட்டத்தின் மூலம் 38 அர்ச்சகர்கள் திருக்கோயிலில் பணியமர்த்தப்பட்டு இருக்கிறார்கள். அன்னை தமிழில் வழிபாடு நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 8 பெண் ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு இருக்கின்றது. இப்படி இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கி காட்டிய தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை இறை அன்பர்களும், சமூக ஆர்வலர்கள், பக்தர்களும் போற்றி புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். திருக்கோயில்கள் மேம்பாடு குறித்து எங்கள் கவனத்திற்கு யார் கொண்டு வந்தாலும் கள ஆய்வு செய்து அதனை உடனடியாக நிறைவேற்றுவதற்கும், புகார்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் இந்து சமய அறநிலையத்துறை தயாராக உள்ளது என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், சேலம் மாநகராட்சி மேயர் இரா. இராமச்சந்திரன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி வி.சபர்மதி, உதவி ஆணையர் கே.ராஜா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள்

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் மாலை அணிவித்தார்!

நாமக்கல், செப். 16 - தமிழ்மொழி உயர்வுக் காகவும், தமிழர்களின் மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், வாழ்நாள் முழுவதும் ஓயாது பாடுபட்ட உத்தமர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாளான செப்டம்பர் 15 ல் நாமக்கல் மேற்கு மாவட்டத்தின் சார்பாக திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு, நகர கழக செயலாளர் தா.கார்த்திகேயன், ஒன்றிய கழக செயலாளர் வட்டூர் ஜி.தங்கவேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். நடேசன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பாலாஜி, மாவட்ட வழக்கறிஞர் தலைவர் சுரேஷ்பாபு மற்றும் மாவட்ட நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கழக செயலாளர்கள், நகர் மன்ற உறுப்பினர்கள், கிளை கழக செயலாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தொண்டர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.


அரியலூரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாளை முன்னிட்டு பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம்,மாவட்ட துணைச் செயலாளர் சந்திரசேகர்,நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி, கோ.அறிவழகன், மா.அன்பழகன், ரெ.அசோகசக்ரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.


பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பேரணியாக விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வணங்கினார். மேலும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்ட விளக்க பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கோ. பாஸ்கரன், நகரச் செயலாளர் இரா. சக்கரை மாவட்ட, ஒன்றிய நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.8.12 கோடியில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,செப். 16 -

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் 09 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.


தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நேற்றைய தினம் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இதன்படி உடையார்பாளையம் பேரூராட்சி, KSANM அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.42.36 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டுதல் பணியினையும், பின்னர், ஆண்டிமடம் ஒன்றியம், கண்டியங்கொல்லை கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.151.41 இலட்சம் மதிப்பீட்டில் இலையூர் கண்டியங்கொல்லை வரை சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து விளந்தை ஊராட்சியில் ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளந்தை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி வகுப்பறை கட்டடத்தினை திறந்து வைத்தார். மேலும், விளந்தை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.12.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை கட்டடத்தினையும் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து நாகம்பந்தல் ஊராட்சியில் தேசிய மதிய உணவுத்திட்டத்தின் கீழ் (NPMDMS) ரூ.5.32 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி சமையலறை கட்டடத்தினை திறந்து வைத்தார். பின்னர் ஆத்துக்குறிச்சி கிராமத்தில் ரூ.120 இலட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டடம் கட்டும் பணியினையும், தொடர்ந்து ஓலையூர் கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.225 இலட்சம் மதிப்பீட்டில் ஓலையூர் அழகாபுரம் வரை சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், திருக்கோணம் கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.222.30 இலட்சம் மதிப்பீட்டில் சிலம்பூர் திருக்கோணம் வரை சாலை அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து பணிகளை தரமான பொருட்களை கொண்டு விரைவில் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து இடையக்குறிச்சி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.5.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப்பள்ளி சமையலறை கட்டடத்தினை திறந்து வைத்து பார்வையிட்டு, மாணவர்களுக்கு தொடர்ந்து சுத்தமாகவும், சுகாதார மான முறையிலும் உணவு தயார் செய்து வழங்க வேண்டும் எனவும், இருப்பு பொருட்களை தூய்மையாக பராமரித்திட வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், துணை இயக்குநர் சுகாதார பணிகள் அஜித்தா, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டடம்) அன்பரசி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், வட்டாட்சியர் இளவரசன், ஒன்றிய செயலாளர்கள் தனசேகர், ரெங்க. முருகன், ஆர்.கலியபெருமாள், பேரூர் செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜகான், பேரூராட்சி மன்ற தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# அன்னைத் தமிழ் உள்ளவரை அண்ணா வாழ்வார்!



ஊட்டுதமிழ் உணர்வுக்கோர் தென்றல் காற்று
ஒருவந்தம் தமிழ்ப்பகைமை முடிக்கும் கூற்று
நாட்டுதமிழ் மக்களுடை அன்பின் ஊற்று
நாடாரை யும்அணைத்துவென்ற மாற்று
கேட்கின்ற செவிகளுக்கோ இசைப்பண் பாட்டு
கிளர்ச்சிமறு மலர்ச்சிகளைக் களம்காண் மீட்பு
ஆட்சிதமி ழர்க்கீந்த அறிஞர் அண்ணா
அன்னைத்தமிழ் உள்ளவரை வாழ்வார் அண்ணா!

தந்தைபெரி யார்பள்ளிப யின்றார் நாற்றைத்
தான்பிடுங்கி நட்டார்போல் வளர்ந்தார் ஈடில்
விந்தைமாசில் ஆளுமையால் வென்றார் ஓங்கும்
விஞ்சுதி முகழகத்தை முதன்மை கண்டார்
செந்தமிழ்நம் எளியஏழை மக்கள் நெஞ்சம்
திசைவெல்லும் சமநீதி பூக்கச் செய்தார்
உந்தெழுச்சி யால்மாற்றம் தமிழர் கண்டார்
உலகுபுகழ் தமிழ்நாடு மலர்ந்த தம்மா!

என்றென்றும் தமிழ்தமிழர் இறையாண் மைக்கே
இருந்தர சோச்சும் கொள்கை குறிக்கோள் தந்தார்
நன்றுதம்பி மார்களுக்கே உரிமை ஈந்தார்
நனிகழகம் தலைசுமந்தார் கலைஞர் கோவே
வென்றறிஞர் அண்ணாவின் கழகம் காத்தார்
வினைத் திட்பத்தால் மீண்டும்ஆட்சி அம்மா
இன்றுமுதன் மைமுதல்வர் மு.க.இசுடாலின்
இருந்தமிழ் நம்கலைஞரண்ணா வழிவெல் ஆட்சி!

சாதிமத பேதங்கள் இல்லா ஆட்சி
சமநீதி சமஅறத்தின் சான்றாம் ஆட்சி
மோதிவரும் இடர்வெறியும் முறையைக் கற்சு
முதிர்குணத்துப் பெருந்தன்மை முதல்வர் ஆட்சி
யாதினிலும் மேம்பா டுடேஅறிஞர் அண்ணா
நம்பிக்கை உறவாடும் உயர்ந்த ஆட்சி
நீதிநெறி வழிவழியாய் நிமிரும் ஆட்சி
நிலைபெறுக அண்ணாவழி ஆட்சி மாதோ!



பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**


பேரறிஞர் அண்ணாவின் 115–வது பிறந்த நாள் விழா தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் தி.மு.க.–வினர் ஊர்வலமாகச் சென்று மரியாதை செலுததினர். அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எம்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் கழகத்தின் இருவர்ணக் கொடியேந்தி ஆயிரத்திற்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் ஊர்வலமாக மறைமலையடிகள் சாலை வழியாக பழைய பேருந்து நிலையம் அடைந்து அங்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.